# கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணை, 2011 மற்றும் தீவுகள் பாதுகாப்புப் மண்டல அறிவிப்பாணை, 2011 குறித்து அதிகமாக கேட்கப்படும் கேள்விகள்

## பொதுவானவை

**1. கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணை, 2011-ன் தேவை என்ன?**

சுற்றுச் சூழல் மற்றும் வன அமைச்சகம் 19.2.1991 அன்று சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் கடற்கரையை பாதுகாக்கவும் மேம்படுத்தவும், முழுமையான முயற்சிகள் மேற்கொள்ளும் பொருட்டு கடற்கரை ஒழுங்குமுறை அறிவிப்பானையினை (CRZ) வெளியிட்டது. இந்த 1991 ஆணையை செயல்படுத்தும் போது கடந்த இரண்டு பத்தாண்டுகளில் கீழ்கண்ட வழக்குகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

- இந்த அறிவிப்பாணை, இந்தியாவின் தீபகற்ப கடற்கரை 5500 km நீளமும், அந்தமான் நிக்கோபார், இலட்சத் தீவுகளின் 2000 km நீளம் முழுவதையும் ஒழுங்குமுறைபடுத்த ஒரே போன்ற நிபந்தனைகளை விதித்தது. ஆதலால், இவ்வளவு நீள கடற்கரையில் இயல்பாகவே அடையாளம் காணக்கூடிய ஒன்றுக்கொன்று முரணான தனித்துவம்மிக்க உயிரினப் பன்மயம், நீர் இயக்க நிலைகள், மக்கள் தொகை அமைப்பு, இயற்கை வளங்கள், நில மற்றும் புவிப்புறவியல் அமைப்புகள் ஆகியவைவற்றின் தனித்துவங்களை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

- இந்த அறிவிப்பில் CRZ அனுமதிச் சான்றிதழ் பெறுவதற்கான தெளிவான செயல்முறைகள் குறித்த விளக்கங்கள், காலவரம்புகள், ஏதும் இல்லை. அனுமதி பெறுவதற்கான வழிமுறை வடிவங்களும் உருவாக்கப் படவில்லை. மேலும் இவ்வறிவிப்பானை செயல்முறைகளுக்கு இசைவு அளித்த பின்னர் அவற்றை நடைமுறை படுத்தும் போது மீறல்களை கண்காணிப்பு முறைகள், தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் எதுவும் வழங்கப்படவில்லை.

- 1991-ன் அறிவிப்பாணை ஏற்றவற்ற இடைபகுதி மற்றும் நிலம் நோக்கிய பகுதியில் 500 மீட்டர் வரையில் நிகழும் அனைத்து வளர்ச்சிப் பணிகளையும் ஒழுங்குமுறை படுத்த முனைந்தது. நிலப் பகுதியில் நிகழும் மாசு கேட்டை தடுக்க அடிப்படையான எந்தவொரு நடவடிக்கைகளும் தெளிவாக குறிப்பிடப்படவில்லை.

- 1991 அறிவிப்பானையின் தடை செய்யும் பண்பு, எளிதில் பாதிப்படையும் சுழல் மண்டலங்களில் வசிக்கும் மக்களுக்கும் சமுதாயத்திற்கும் பெருந்துன்பம் தந்தது. இதில் குறிப்பாக மும்பையிலுள்ள குடிசைவாழ் மக்களுக்கும், இடிந்த பாதுகாப்பில்லாத கட்டிடங்களில் வாழ்பவர்களுக்கும், கேரளாவின் காயல் பகுதிகளில் வாழும் சமுதாயத்தினருக்கும், கோவாவின் கடற்கரையோரம் மக்களுக்கும், மற்ற பாரம்பரிய கடற்கரை வாசிகளுக்கும் சிரமங்களை ஏற்படுத்தியது.

- மேலும் இந்த 1991-ன் அறிவிப்பாணை மாநில அரசாங்கம், மத்திய அமைச்சரவை மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் வேண்டுகோள்களின் படி 25

முறைகளுக்கும் மேல் திருத்தியமைக்கப்பட்டது. மேலும் பல தனி வகைமுறைகளை விளக்க பல்வேறு அலுவலக ஆணைகளையும் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சரவை வெளியிட்டுள்ளது. இவை அனைத்தும் 2011-ன் அறிக்கையில் முழுவதுமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய அனைத்து வழக்குகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டும் கடற்கரை ஒழுங்குமுறைகள் குறித்த மா.சா. சுவாமிநாதன் தலைமையிலான ஆய்வுக் குழுவின் "இறுதி எல்லை" என்ற அறிக்கையின் பரிந்துரைகளையும், பல்வேறு மக்கள் கருத்தாய்வுக் கூட்டங்களில் பெற்ற கருத்துக்களையும் கருத்தில் கொண்டு முழுமையான தீர்வுகளை கொண்டு வரும் வகையில் 2011-ன் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் கோவா, சென்னை, பூரி, கொச்சி மற்றும் மும்பையில் நிகழ்ந்த மக்கள் கருத்தாய்வுக் கூட்டங்களுக்கு மத்திய இணை அமைச்சர் (தனித்தியங்கு பொறுப்பு) அமைச்சர் தலைமை ஏற்று நடத்தினார்.

**2. கடற்கரை ஒழுங்குமுறை அறிவிப்பாணை 2011-ன் முக்கிய குறிக்கோள்கள் யாவை?**

- கடற்கரை ஒழுங்குமுறை அறிவிப்பாணை 2011-ன் முக்கிய குறிக்கோள்கள்:
- கடற்கரை பகுதிகளில் வாழும் மீனவர்கள் மற்றும் அங்கு வாழும் மற்றைய மக்களின் வாழ்வாதாரங்களை பாதுகாப்பதற்கும் உறுதிப்படுத்துவதும்
- கடற்கரை பகுதிகளை பராமரிக்கவும், பாதுகாக்கவும்
- கடற்கரை மண்டலத்தில் நிகழும் இயற்கை சீற்றங்களின் அபாயங்களையும், புவி வெப்பமாதல் நிகழ்வினால் கடல்மட்டம் அதிகரித்தல் போன்றவற்றை கருத்தில் கொண்டு அறிவியல் கொள்கைகளின் அடிப்படையில் முன்னேற்ற செயல்களை ஊக்கப்படுத்துவது

# 2011 அறிவிப்பாணையின் படி கடற்கரை ஒழுங்குமுறை மண்டலங்களை அடையாளம் காண்பதும், வகைப்படுத்தலும்

1. கடற்கரை மண்டலங்கள் 2011 அறிக்கையின்படி எவ்வாறு வகைப்படுத்தப் படுகின்றன?

1991-ன் அறிக்கை படி நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தன: CRZ-I (சூழலில் எளிதில் பாதிப்படையக் கூடிய பகுதிகள்) CRZ II (கட்டமைக்கபட்ட பகுதிகள்) CRZ III கிராமப்புற பகுதிகள் CRZ IV நீர் நிறைந்த பகுதிகள் இந்த நான்குமே 2011-ன் அறிவிப்பாணையில் இருக்கிறது. இவை தவிர, CRZ-IV-ல் நம் நாட்டின் கடல் பரப்பு முழுவதையும், ஓத அலைபெருக்கின் தாக்கம் உள்ள நீர் நிலைகளையும், சேர்த்துக்கொண்டது மட்டிலுமே செய்யப்பட்ட மாற்றங்கள் ஆகும்.

அந்தமான்-நிகோபார் தீவுகள் மற்றும் இலட்சத் தீவுகளை பாதுகாக்கும் நோக்கத்துடன், சுற்றுச் சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986-இன் கீழ் முதல் முறையாக வரைவு தீவுகள் பாதுகாப்பு மண்டல அறிவிப்பாணை வெளியிடப்பட்டுள்ளது.

2. CRZ-I பகுதியாக தேர்ச்சிப் பெறுவதற்கு உரிய கடற்கரை மண்டலங்கள் எவை?

கடற்கரை ஒழுங்குமுறை அறிவிப்பாணை (2011) மிகத் தெளிவாக CRZ-I-ற்கான பகுதிகளை தெரிவிக்கிறது. இதில் கீழ் வருவன அடங்கும்:

i. கடற்கரை மண்டலங்களில் எளிதில் பாதிப்படையக் கூடிய பகுதிகள், மற்றும் கடற்கரை பகுதிகளை ஒருமை படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கும் புவிபுற அமைப்புகள் CRZ-I -றினுள் அடங்கும், இதில்:

- அலையாத்திகள், 1000 சதுர மீட்டருக்கும் அதிக பரப்புள்ள அலையாத்திக் காடுகள் எனில், இடைதடுக்கு பகுதியாக 50மீ கொடுக்கப் படும்.
- பவழ உயிர்களும், பவழப்பாறைகளும் அதனோடு இணைந்த உயிரினப் பன்மையம்
- மணற்குன்றுகள்
- உயிரிகள் நிறைந்த சேற்றுப் படுகை
- தேசிய பூங்கா, கடற் பூங்கா, உயிரியல் சரணாலயங்கள், ஒதுக்கீடு காடுகள், உயிரியல் (பாதுகாப்பு) சட்டம், 1972-ன் கீழ் உள்ள உயிரினங்களின் வாழிடங்கள் மற்றும் இதர பாதுகாக்கப்பட்ட பகுதிகளும், காடுகள் (பாதுகாப்புச்) சட்டம், 1980 (1989- இன் 69) அல்லது சுற்றுசூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 (1986- இன் 29) உயிர்கோள பாதுகாப்புப் பகுதிகளில் உள்ளடங்கும்:
- உவர் செற்றுப் பகுதிகள்
- கடலாமைகள் முட்டையிடும் பகுதிகள்,
- (குதிரைஇலாட) நண்டுகள் வாழும் பகுதிகள்,
- கடலில் புல் பரப்பு,

- பறவைகள் இனப்பெருக்கம் செய்யும் தளங்கள்,
- தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பாரம்பரியப் பகுதிகளும்

ii. ஏற்ற வற்ற இடைப்பகுதிகள்

3. எத்தகைய நடவடிக்கைகள் CRZ-I-ல் ஏற்கத்தக்கது?

தொடர்ந்து திருத்தப்பட்டு 1991 அறிவிப்பின்படி ஏற்கப்பட்ட நடவடிக்கைகள் 2011 அறிவிப்பின்படி ஏற்கப்படுகின்றன. இவை கீழ்வருவனவுடன் தொடர்புடையதாகும்.

i. எத்தகைய புதிய கட்டுமானப் பணிகளும் அனுமதிக்கப்படஇயலாது. கிழ்வருவனவற்றை தவிர:

   - அணுஆற்றல் துறையின் திட்டங்களுடன் தொடர்புடையவை
   - குழாய் இணைப்புகள், பொருட்களை சுமந்து செல்லும் நாடா பட்டைகளின் கட்டமைப்புகள்
   - CRZ-I ன் கீழ் ஏற்புடைய நடவடிக்கைகளுக்கு தேவையான வசதிகள்
   - இந்திய வானிலை ஆராய்ச்சித் துறை, புயல், சூறாவளிக் காற்று போன்ற நிகழ்வுகளை வானிலை முன்னறிக்கை செய்ய உதவும் வானிலை ரேடார் கருவிகளை நிறுவுதல்
   - கப்பல் துறைமுகத்தை சென்றடைய உதவும் தூண்கள் அல்லது முட்டுகளின் மீது அமைக்கப்பட்ட இணைப்பு சாலைகளை, ஏற்றவற்ற எடைபகுதியில் நீர் பய்ச்சலை பாதிக்காத வகையில் கட்டி அமைத்தல்.
   - சூழலுக்கு பெரும் பாதிப்புகளை விளைவிக்காத பசுமை விமான நிலையத்தை அமைக்க நவி மும்பை எனும் மும்பை நகரத்தின் ஒரு பகுதியில் மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ii. உயர் பேரலைக்கும், தாழ்ந்த பேரலைக்கும், இடைப்பட்ட ஏற்ற வற்ற இடைபகுதியில், சுற்று சூழல் எளிதில் பாதிக்கப்படாத பகுதிகளில் கீழ் வருவன அனுமதிக்கப்படலாம்

   - இயற்கை எரிவாயு இருக்கும் இடங்களை ஆய்வு செய்தல் மற்றும் அகழ்ந்து எடுத்தல்
   - CZMA -வின் ஒப்புறுதி பெற்றபின் மருந்தகம், பள்ளிகக்கூடங்கள், பொது மழை காப்பு குடை, பொது கழிப்பறைகள், பாலங்கள். சாலைகள், படகுத்துறை, வடிகால் வசதி, கழிவுநீர் சாக்கடை போன்ற அடிப்படை வசதிகள், உயிர்கோளத்தினுள் பாரம்பரியமாக குடியிருக்கும் சமுதாயத்தினருக்கு கட்டிக் கொடுத்தல்.
   - சூரிய ஒளி கொண்டு நீராவியாதல் மூலம் கடல் நீரில்லிருந்து உப்பு எடுத்தல்
   - கடல்நீரை நன்னீராக்கும் வசதிகளை அமைத்தல்
   - ஆபத்து விளைவிக்காத சமையல் என்னை, உரம் மற்றும் உணவுப் தானியங்களின் சரக்குகளை சேகரிக்கும் கிடங்குகளை அறிவிக்கப்பட்ட துறைமுகங்களில் அமைத்தல்.

4. எந்த கடற்கரை பகுதிகள் CRZ-II வகையினத்தை சேர்ந்ததாக தகுதி பெருகிறது?

CRZ-II இடங்களாக கடற்கரையின் அருகாமையிலும் அல்லது கடற்கரை வரையிலும் உள்ள வளர்ச்சி அடைந்திருக்கும் பகுதிகள் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகள் என்று இந்த அறிவிப்பாணை வரையறுக்கிறது.

5. CRZ II இடங்களில் எத்தகைய செயல்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது?

தற்போதுள்ள சாலைகளின் நிலம் நோக்கிய பகுதியில், கட்டிடங்கள் கட்டுவது ஏற்புடையது, ஏற்புடைய கட்டுமானம் இல்லையெனில், இடர்கோட்டின் நிலம் நோக்கிய பகுதியில், கட்டிடங்கள் கட்டுவது ஏற்புடையது ஆகிறது. அபாயமற்ற சரக்குகளை சேமித்து வைத்தல். கடல்நீரைக் குடிநீராக்கும் உப்புநீக்கி நிலையங்கள் அமைத்தல் போன்ற மற்ற நடவடிக்கைகளும் ஏற்புடையது. குடிசை மாற்றுப் பணிகளுக்கும், பாழான இடிந்த கட்டிடங்களின் புனரமைபிற்கும் CRZ அறிவிப்பாணை 2011-இல் குறிப்பிட்டுள்ளவற்றை தவிர்த்து, மற்ற கட்டுமானப் பணிகளுக்கு, கட்டிடப் பரப்பு விகிதம் (FSI & FAR) 19.2.1991 உள்ளது போலவே இருக்கலாம்.

6. எத்தகைய கடற்கரை நிலங்கள் CRZ-III-இன் வரையறுக்கப்படுகிறது? இந்த இடத்தில் எத்தகைய செயல்கள் ஏற்கத்தக்கது?

CRZ-III நிலங்கள் என்பவை CRZ-I மற்றும் CRZ-II-இன் கீழ் வராத, அதிகம் சீர் குலையாத வளர்ச்சி அடையாத நகர மற்றும் கிராமப் புற இடங்கள் உள்ளடக்கியது. CRZ-III 1991 அறிவிப்பாணையில் பட்டியலில் இருந்த அதே ஏற்புடைய நடவடிக்கைகள் இதிலும் இருக்கிறது. உயர் அலைக் கோட்டில் இருந்து 0-200 மீட்டருக்கு இடைப்பட்ட பகுதியில் எந்த விதமான வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படக் கூடாது. எந்தவித கட்டுமானப் பணிகளுக்கும் அனுமதி கிடையாது. சில நடவடிக்கைகள் மட்டும் விவசாயம், தோட்டப்பயிர் வேளாண்மை, தோட்டம், மேய்ச்சல் நிலம் பூங்கா, விளையாட்டு மைதானம், வனத்துறை நடவடிக்கைகள், அணுஆற்றல் துறை திட்ட நடவடிக்கைகள், அரிய கனிமங்களை எடுக்கும் சுரங்கத் தொழில், கடல் நீரிலிருந்து உப்பு தயாரித்தல், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் நீர்மமாகிய இயற்கை எரிவாயு, பொருட்களின் சரக்குகளை பெறுவதற்கும் சேமித்து வைப்பதற்கும் தேவையான வசதிகள், மரபுசாரா மினாற்றல் தயாரிக்கும் அமைப்பு வசதிகள் மற்றும் குறிப்பிட்ட பொது வசதிகள் இப்பகுதிகளில் அனுமதிக்கப்படலாம். உயர் அலை கோட்டில் இருந்து 200-500 மீட்டருக்குள் உள்ளூர் சமுதாயத்தினரின் வீடுகளை புதிதாக கட்டுவதற்கும் புனரமைப்பதற்கும், சுற்றுலா திட்டங்கள், நவி மும்பையில், சூழலுக்கு தீங்கு விளைவிக்காத (பச்சை நில) விமானநிலையம் கடல் நீரிலிருந்து உப்பு தயாரித்தல், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் நீர்மமாகிய இயற்கை எரிவாயு, பொருட்களின் சரக்குகளை பெறுவதற்கும் சேமித்து வைப்பதற்கும் தேவையான வசதிகள், மரபுசாரா மினாற்றல் தயாரிக்கும் அமைப்பு வசதிகள், ஆபத்து விளைவிக்காத சரக்குகளை இருப்பு வைக்கும் கிடங்கு வசதிகள், அனுமதிக்கப்படுகிறது.

7. CRZ-IV-ஆக வரையறுக்கப்படும் கடற்கரை பகுதிகள் எவை?

ஓத அலைகளின் தாக்கம் உள்ள நீர் நிலைகள், மற்றும் நாட்டின் உரிமை கடல் பகுதி வரையுள்ள நீர்பகுதி இதனுள் வரையறுக்கப்படுகிறது.

8. CRZ-IV-க்குள் எத்தகைய நடவடிக்கைகள் அனுமதிக்கப்படுகிறது?

CRZ-IV நிலங்களில் பாரம்பரிய மீனவ தொழிலும் அதை சார்ந்த தொழில் செய்யும் உள்ளூர் சமுதாயத்தினரும் தொழில் செய்வதற்கு தடை எதுவும் இல்லை. இருப்பினும், சுத்திகரிக்கப்படாத கழிவு நீர், திடக்கழிவுகள் கொட்டுதல் ஆகாது. இந்த இடத்தில் நகரத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரை சுத்திகரிக்கும் திட்டங்கள், அறிவிப்பாணை வெளியிடப்பட்ட ஒரு வருடத்திற்குள் உருவாக்கப்பட வேண்டும். மேலும் திட்டம் அமைக்க அதிலிருந்து 2 வருடத்திற்குள் அதை செயலாக்கப்பட வேண்டும்.

# III மீனவர் சமுதாயங்களுக்கு வழங்கப்படும் சிறப்புச் சலுகைகள்

**1. 2011 அறிவிப்பாணையில் மீனவர் சமுதாயங்களுக்கு பயன்படும் வகையில் வழங்கப்பட்டுள்ள புதிய சலுகைகள் யாவை?**

மீனவர் சமுதாயங்கள் பெரும்பாலும் கடற்கரை மண்டலங்களிலேயே வாழ்வதால் வரைவு அறிவிப்பாணை உருவாக்கப்படுகையில் அவர்களுக்கு முதல்நிலை முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

அறிவிப்பனையில் எழுத்துவடிவில் வந்துள்ள நோக்கங்களில் "*கடலோரப் பகுதிகளில் வாழ்ந்துவரும் மீனவ சமுதாயங்களுக்கும், மற்ற உள்ளூர் சமுதாயங்களுக்கும் வாழ்வாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், கடலோரப் பகுதிகளின் தனிச்சிறப்புவாய்ந்த சுற்றுச்சூழலையும் மற்றும் அதன் நீர்ப்பரப்புகளையும் பேணிப்பரமாரிக்கவும், கடலோரப்பகுதிகளில் இயற்கைச்சீற்றங்கள், அதன் விளைவான பேரழிவுகள், புவி வெப்பமாதல் காரணமாய் உயர்ந்துகொண்டே போகும் கடல் மட்டம் ஆகியவை தொடர்பான அபாயங்களைக் கணக்கிலெடுத்துக்கொண்ட அளவில், அறிவியல்கோட்பாடுகளின் அடிப்படையில் நிலைப்புத்தன்மை கூடிய வழியில் வளர்ச்சி-மேம்பாட்டை உறுதிசெய்யவும், வளர்க்கவும்,*" என்பதாகும்.

மீனவர் சமுதாயத்தினருடன் தொடர்புடைய, வழக்குகளுக்கு பதில் அளிக்கும் வண்ணம் கிழ் வரும் சலுகைகள் 2011 அறிவிப்பாணையில் வழங்கப்பட்டுள்ளது.

(i) கடல் நீரினுள் 12 கடல் மைல் தூரம் வரையிலும் ஓத அலைகளின் தாக்கம் உள்ள நீர் நிலைகளும் கடற்கரை ஒழுங்குமுறை மண்டலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இது கிழ் வரும் காரணங்களுக்காக செய்யப்பட்டுள்ளது.

- சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், மற்றும் திடக்கழிவுகள் வெளியேற்றத்தினால் மீன்வளம் மற்றும் அவற்றின் வாழ்க்கைச்சூழலை அபாயத்திற்குள்ளாக்கும் காரணத்தால் அவற்றைக் கட்டுப்படுத்துதல்
- பவழப்பாறைகள், பவழஉயிரிகள் மற்றும் தொடர்புடைய உயிரினப் பன்மயம், கடல் உயிரிகளின் சரணாலயங்கள், உயிர்கோள காப்பகம், கடற்புல்படுகை போன்ற மீன்களின் இனவிருத்திக்கு உதவும் பரப்புகள், மீன்வளர்ப்புப் பகுதிகளைப் பேணிப் பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல்;
- கடல்நீர்ப்பரப்பு மற்றும் கடலோர நீர்ப்பரப்புகளில் தூர்வாருதல், மணல் அள்ளுதல், கப்பல்களிலிருந்து கழிவுநீர் வெளியேற்றுதல், குறுக்குக் கரை/ கொம்பணை, அலைமுறிகள் மற்றும் நிலா மீட்சி/ நிலா சீரமைப்புப் பணிகள் போன்ற மீன்பிடித்தொழில் மற்றும் அதனோடு தொடர்புடைய செயல்பாடுகளை மிகக் கடுமையாக பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல், ஒழுங்கமைத்தல்;
- காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால் கடலோரப் பகுதிகளிலும், கடல்நீர்ப்பரப்பிலும் ஏற்படக்கூடிய/ ஏற்படுகின்ற மாற்றங்கள், பாதிப்புகள் மற்றும் மீனவசமூகத்தினரின் வாழ்வாதாரம் மற்றும் சொத்துடைமையைப் பெரிய அளவில் பாதிக்கும் இயற்கைப்பேரழிவுகள் தோன்றுவதற்கான காரண-காரியங்கள் ஆகியவற்றை ஆய்ந்தறிவதற்கு அதற்கான ஆய்வுகளுக்கு வழிவகுத்தல்;

இந்தப் பகுதியிலுள்ள பாரம்பரிய மீனவ சமூகங்களின் மீன்பிடித் தொழிலுக்குரிய செயல்பாடுகள் மற்றும் அவற்றோடு தொடர்புடைய நடவடிக்கைகள் எவற்றின் மீதும் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இதில் விதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ii) நாட்டிலுள்ள பல்வேறு கடலோரப்பகுதிகளில் வசித்துவரும் மீனவ சமூகத்தினரும் அவர்களுடைய குடியிருப்புப் பகுதிகளும் நில அரிப்பினால் அபாயத்திற்குள்ளாகி இருக்கின்றன. இத்தகைய நில அரிப்புகள் பெருமளவில் மனிதச் செயல்பாடுகள் காரணமாகவே தோன்றுகின்றன. எனவே, அத்தகைய மனித செயல்கள் ஒழுங்கமைக்கபடுவதோடு, குறிப்பிட்ட கடலோரப் பகுதியினை அதிக நில அரிப்புப் பகுதி, மித நில அரிப்புப் பகுதி, அல்லது நிலையான பகுதி என மூன்று பிரிவுகளாக வரையறுத்து பிறகு, அதன் அடிப்படையில், உரிய அளவாய் ஒழுங்கமைக்கப்படும்;

(iii) கடலோர மண்டல மேலாண்மைத் திட்டங்களைத் தயாரிக்கும்போது மீனவ சமூகத்திற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகள் தெளிவாக வரையறுத்துத் தரப்படவேண்டும்; அதேபோல், நீர்ப்பரப்புகளில் மீன்பிடி மண்டலங்கள் எவை என்பதும், மீன்வளர்ப்புப் பகுதிகள் எவை என்பதும் தெளிவாகக் குறித்துக்காட்டப்பட வேண்டும்.

(iv) 2011 ஆம் ஆண்டின் அறிவிப்பாணை, தொடர்புடைய பகுதியின் பயனாளிகளின் வரைவுக் கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்துடன் கடற்கரை மண்டல மேலாண்மை ஆணையத்தின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை, இணைத்துத் தாக்கல் செய்யும்படி கோருகிறது. இதன்மூலம் கடற்கரை மண்டல மேலாண்மைத் திட்டங்களைத் (CZMPக்கள்) தயாரிப்பதில் உள்ளூர் சமூகங்களின் – மீனவ சமூகங்கள் உட்பட- கருத்துகளும் கவனத்தில் எடுத்துக்கொள்வதை முதன்முறையாக உறுதிசெய்யப்பட்டுள்ளது.

(v) இந்த அறிவிப்பாணை CRZ-III (கடலோர ஒழுங்குமுறை மண்டலம் -111)பகுதியில் உள்ளூர் மீனவ சமூகங்களுக்கான கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்படுவதற்கு அனுமதியளிக்கிறது.

(vi) உள்ளூர் மீனவ சமூகங்களின் வசிப்பிடங்கள், குடியிருப்புப்பகுதிகள் மறுகட்டமைப்பு, பழுதுபார்ப்புப் பணிகள் – மீன்வளர்ப்புப் பணிகள், பிடித்துறைகள் உட்பட – உள்ளூர் நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் கட்டுமான ஒழுங்குமுறை விதிகளுக்கு ஏற்ப அனுமதிக்கப்படுகின்றன.

(vii) CRZ-III பகுதிகளில், 0-200 மீட்டர்கள் வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்படலாகா மண்டலமாக அமைந்துள்ள இடங்களில்[(No Development Zone (NDZ)] அங்குள்ள மீனவர்கள் உட்பட, உள்ளூர் மக்கட்சமூகங்களின் வசிப்பிடங்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டி இந்த 100 மீட்டர்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. எனவே, இத்தகைய மக்கட்சமூகங்களின் வீடுகள்/வசிப்பிடங்கள் கடல்நோக்கிய பக்கத்திலான உயர் அலைக்கோட்டிலிருந்து 100 – 200 மீட்டர்கள் தொலைவில் உரிய மாநில அரசின் ஒப்புதலையும், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் அனுமதியையும் பெற்று அளவில் கட்டியெழுப்பப்படலாம்.

2. 2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணையில் மீனவ சமூகங்களுக்கான அந்தந்த மாநிலங்களுக்குரிய விதிமுறைகளாக/ வழிவகைகளாக வகுத்துரைக்கப்பட்டுள்ளவற்றில் சிலவற்றைக் கூறுக:

மகராஷ்டிரா, கோவா, கேரளா, சுந்தர்பன் காடுகளுக்கும் மற்ற பாதிப்புகளுக்கு ஆளாகக்கூடிய நுண்மையான சூழல் பகுதிகளின் கடலோரங்களில் வாழ்ந்துவரும் மீனவ சமுதாயங்களுக்கென தனிச்சிறப்பான விதிமுறைகளும் இதில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

- **அகண்ட மும்பை பகுதி:** அகண்ட மும்பை பகுதியில் வழிவழியாக வாழ்ந்துவரும் உள்ளூர் மீனவ சமுதாயத்தினருக்காக (குறிப்பாக கோலிவாடாக்கள்) ஒரு தனிச்சிறப்பான விதிமுறை இந்த அறிவிப்பாணையில் இடம்பெற்றுள்ளது. இதன்படி மேற்படிப் பகுதி CRZ-III என்பதாக வரிபடத்தில் குறித்துக் காட்டப்பட்டு, அறிவிக்கப்படுவதோடு அங்கே கட்டுமானப்பணிகள்,

மறுகட்டுமானப்பணிகள் உள்ளிட்ட வளர்ச்சி-மேம்பாட்டுப் பணிகள் உள்ளூர் நகர்ப்புற மற்றும் கிராமப்புற வளர்ச்சித்திட்ட ஒழுங்கு விதிகளுக்கேற்ப மேற்கொள்ளப் படலாம்.

- **கோவா:** கோவா அரசு கோவா கடலோரப் பகுதி முழுவதும் அமைந்துள்ள மீனவ கிராமங்களை சுற்றாய்வு செய்து வரைபடத்தில் குறித்துக்காட்ட வேண்டும். அந்த கிராமங்களில் மீன்பிடித்தொழில் மற்றும் அதனோடு தொடர்புடைய செயல்பாடுகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்துதரப்பட வேண்டும். 1991ஆம் ஆண்டைய கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணையின்படி, கடலோர ஒழுங்குமுறை மண்டலங்களில் அமைந்துள்ள உள்ளூர் மக்கட்சமூகங்களின் வசிப்பிடங்கள், குடியிருப்புப்பகுதிகளில் விரிவாக்கம்/ மறுகட்டமைப்பு/ பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுதல், உரிய அதிகார அமைப்புகளிடமிருந்து உரிய அனுமதி பெறப்படாமலே மேற்கொள்ளப் படுமெனில் சட்டமீறலாகப் பாவிக்கப்பட்டன. இத்தகைய குடியிருப்புப் பகுதிகள் (சுமார் 5000) இடிக்கப்பட வேண்டுமென்று மும்பை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. என்றபோதும், 2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணை உள்ளூர் மக்கட் சமூகங்களின் குடியிருப்புப் பகுதிகளில் மீள்-கட்டமைப்புப் பணிகள் மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படலாம் என்று அனுமதியளிக்கிறது.

- **கேரளா:** கேரளாவிலுள்ள CRZ பகுதி, கடலில் இருந்து நிலம் நோக்கிய பகுதியில், உயர் அலைக் கோட்டிலிருந்து 50 மீட்டர்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. இபபகுதி ‘வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படக் கூடாத மண்டலம் ஆகும். இப்பகுதியில் அமைந்துள்ள உள்ளூர் மக்கட் சமூகங்களின் குடியிருப்புப் பகுதிகளில் புதிய கட்டுமானப்பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படக் கூடாது. என்ற போதும், இங்கு உள்ளூர் மக்கட் சமூகங்களின் குடியிருப்புப் பகுதிகள் அமைந்து இருந்தால், அதில் பழுதுபார்ப்புப் பணிகளும், மீள்-கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப் படலாம். மீன்பிடித்துறையின் அலைவாய்-வசதி தேவைப்படும், படகுத் துறை, மீன் உலர்த்தும் திடல், வலை பின்னும், பழுதுபார்க்கும் தளம், பாரம்பரிய வழிமுறைகளில் மீன் பதனிடும் பணிகள், படகு கட்டும் துறைகள், பனிப் பாளங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, படகு பழுதுபார்த்தல், இதர, வசதிகளும் 0 – 50 மீட்டர்களுக்கு உட்பட்ட பரப்பில் கட்டப்படலாம். நிலம் நோக்கிய பகுதியில், உயர் அலைக்கோட்டிலிருந்து 50 மீட்டர்கள் தொலைவுக்கு அப்பால் உள்ளூர் மக்கட் சமூகங்களின் குடியிருப்புகள் உள்ளூர் பஞ்சாயத்தின் அனுமதியோடு கட்டமைத்துக் கொள்ளப்படலாம்.

- **சுந்தர்பன்:** சுந்தர்பன் மற்றும் இதர எளிதில் பாதிக்கப்படலாகும் சூழல் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை ஒழுங்கமைக்கவும் இந்தப் பகுதிகளில் வாழ்ந்துவரும் உள்ளூர் மக்கட் சமூகங்களின் நன்மைக்காக பராமரிப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு என, ஒரு ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டம் (IMP) ஒன்று , அப்பகுதி மக்களைக் கலந்தாலோசித்து அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். சூழல் ரீதியாக எளிதில் பாதிக்கப்படலாகும் இத்தகைய பகுதிகளில் வழிவழியாக வாழ்ந்து வரும் மீனவர்கள் உள்ளிட்ட அளவிலான உள்ளூர் மக்கட்சமூகங்களின் குடியிருப்பு தேவைகளும் இந்த ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டத்தில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

## IV மாசை கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

**A. கடலோரப் பகுதிகள்/ கடலோர நீர்ப்பரப்புகள் மாசடைவதைத் தடுக்க 2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணையில் இடம்பெற்றுள்ள வழிவகைகள் யாவை?**

கடலோரப் பகுதிகள்/ கடலோர நீர்ப்பரப்புகள் மாசடைவதைத் தடுக்க 2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணையில் சில வழிமுறைகள் பட்டியலிடப்பட்டு உள்ளன. கடற்கரை மண்டல நீர்ப்பரப்புகளில் திடக் கழிவுகள் மற்றும் கழிவுநீர் வெளியேற்றம் தடை செய்யப்பட்டுள்ளது கடலோர மாநிலங்கள் அனைத்தும் பிவருவனவற்றை உறுதி செய்ய வேண்டும் :

- நடைமுறையில் இருந்து வரும், சுத்திகரிக்கப்படாத கழிவு மற்றும் கழிவுநீர் வெளியேற்றம், அடுத்த இரண்டு வருடங்களுக்குள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு முழுவதுமாக நிறுத்தப்பட வேண்டும்.
- இந்த அறிவிப்பாணை நடைமுறைக்கு வரும் நாளில் இருந்து ஒரு வருட காலகட்டத்திற்குள் திடக்கழிவுகளை கொட்டும் வழக்கம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு முழுவதுமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்;
- கடற்கரை மண்டலத்திலும் நீர்ப்பரப்புகளிலும் மாசு ஏற்படுவதைத் தடுக்க காலக் கெடுவுடன் கூடிய அளவிலான ஒரு செயல்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.
- இந்த செயல்திட்டத்திற்கான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்கும் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திடம் இந்த செயல்திட்டம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

## V அனுமதி வழங்கும் வழிமுறைகள்:

**1. 2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணையின் கீழ் வகுத்துரைக்கப்பட்டு உள்ள தடை நீக்கம் பெரும் வழிமுறைகள் யாவை?**

1991ஆம் ஆண்டின் CRZ அறிவிப்பாணை போன்று இல்லாமல், 2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணையில் அனுமதி பெறத் தேவையான ஒரு குறிப்பான வழிமுறை வகுத்துரைக்கப்பட்டு உள்ளது. அந்த வழிமுறை பின்வருமாறு:

i. செயல்திட்ட அதிகாரிகள்/அதிகார அமைப்புகள் செயல்திட்ட வரைவை உரிய மாநில/ யூனியன் பிரதேச கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்திடம் (CZMA-க்களிடம்) பின்வரும் ஆவணங்கள்/அறிக்கைகள் தாக்கல் செய்ய வேண்டும்

- படிவம் _1 (அறிவிப்பாணையின் பின்னிணைப்பு – IV)
- துறைமுகம் சார் மற்றும் அலைவாய் பகுதிகள் தேவைப்படும் திட்டங்கள் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் அவ்வப்போது வெளியிடுகின்ற வழிகாட்டிநெறிகளுக்கு ஏற்ப, விரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பாய்வு (EIA)

அறிக்கை – கடல் மற்றும் புவிப்பரப்பு EIA உட்பட, விரிவான EIA அறிக்கையினை தாக்கல் செய்ய வேண்டும்.

- பேரிடர் மேலாண்மை அறிக்கை மற்றும் மறையிடர் மேலாண்மை அறிக்கை;
- அதிகாரபூர்வ அமைப்பு மூலம் வரையறுத்துத் தரப்பட்டுள்ள உயர் அலைக்கோடு மற்றும் தாழ் அலைக்கோடுகளைக் குறித்துக்காட்டுகின்ற CRZ வரைபடம்(1:4000 அளவு விகிதத்தில்);
- மேற்படி வரைபடத்தின் மேல் பொருத்திக் காண்பிக்கப்பட்ட அளவிலான செயல்திட்ட வரைபடம்.
- பொதுவாக ஒரு CRZ வரைபடமானது செயல்திட்ட இடத்தில் இருந்து 7 கி.மீ சுற்றுப்பரப்பைக் குறித்துக்காட்ட வேண்டும்.
- இந்த CRZ வரைபடம் CRZ-I, II, III மற்றும் IV ஆகிய பகுதிகளைக் குறித்துக்காட்ட வேண்டும் '
- கழிவுநீர்கள், திடக்கழிவுகள், சாக்கடை கழிவு அன்னபிறவற்றை வெளியேற்றக்கூடிய செயல்திட்டங்களுக்கு உரிய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அல்லது குழுமங்களிடமிருந்து இசைவுச் சான்றிதழ் பெறப்பட வேண்டும். (கடலோர நீர்ப்பரப்புகளில் மாசு ஏற்படுவதைக் குறைந்த பட்சமாக்கும் பொருட்டு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அல்லது குழுமங்களிடமிருந்து இசைவுச் சான்றிதழ் பெரவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது

ii. உரிய CZMA மேற்படி ஆவணங்களை அங்கீகரிக்கப்பட்டுள்ள CZMP மற்றும் CRZ அறிவிப்பாணையோடு பொருந்துமளவில் பரிசீலித்து, பரிந்துரைகளை, ஆவணம் கையில் கிடைத்த தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளாக தாக்கல் செய்ய வேண்டும். இவை :

- சம்பந்தப்பட்ட செயல்திட்டம் 2006ஆம் ஆண்டைய EIA அறிவிப்பாணையின் கீழ் பரிசீலனையைக் கோருவதாக உள்ள பட்சத்தில் மேற்படி SEACக்கு அல்லது, EAC-க்கும்
- CRZ அறிவிப்பாணையின் கீழ் பரிசீலனையைக் கோருவதாக உள்ள பட்சத்தில் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அல்லது மாநில அரசிடம் தரவேண்டும்;

iii. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம்(MoEF) அல்லது மாநில அரசு சம்பந்தப்பட்ட CZMA விடம் இருந்து பெறப்பட்ட மேற்படி பரிந்துரைகளின் அடிப்படையில் அறுபது நாட்களுக்குள்ளாக அந்த செயல்திட்டங்களைப் பரிசீலித்து முடிவெடுக்கவேண்டும்;

**2. இந்த தடைநீக்கம்/ அனுமதியளிப்பு எத்தனை காலம் செல்லுபடியாக அமையும்?**

2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணையின் கீழ் வழங்கப்படும் தடைநீக்கம்/ அனுமதியளிப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலம் செல்லுபடியாக இருக்கும்.

**3. தடைநீக்கம் பெற்ற பிறகு கண்காணிப்புச் செயலமைப்புகள் யாவை ?**

2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணையின் கீழ் அனுமதி பெற்றபின் கீழ் வரும், செயலமைப்பு நடைமுறைக்கு வரும்:

- செயல்திட்ட நிர்வாக அமைப்பு, சுற்றுச்சூழல் தடைநீக்கம் வழங்கப்படுவதற்கென வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் விதிமுறைகளுக்கும், ஏற்ப நடப்பதாக உறுதிமொழி பகரும் அறிக்கைகள் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் ஒன்று மற்றும் டிசம்பர் முப்பத்தியொன்று தேதிகளில் உரிய ஒழுங்குமுறை அதிகார அமைப்பிடம் அச்சிலும், மென்பொருள் வடிவிலும் தாக்கல் செய்யப்பட வேண்டும்;

- செயல்திட்ட மேலாண்மை அமைப்பால் சமர்ப்பிக்கப்பட்ட இத்தகைய கீழ்படிதல் அறிக்கைகள் அனைத்தும் பொதுமக்கள் பார்வைக்குரிய ஆவணங்களாக வைக்கப்பட வேண்டும்.

- உரிய ஒழுங்கமைவு அதிகாரியிடம்/அதிகார அமைப்பிடம் மனு தரும் எவரொருவருக்கும் மேற்படி ஒப்பேற்பு அறிக்கைகளின் பிரதிகள் தரப்படவேண்டும்;

- இறுதி கீழ்படிதல் அறிக்கை உரிய ஒழுங்கமைவு அதிகார அமைப்பின் இணையதளத்திலும் வெளியிடப்படவேண்டும். தடைநீக்கம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலம் அது செல்லுபடியாகம் விளங்கும்.

## VI. செயலாக்க வழிமுறைகள்:

### 1. 2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணையின் கீழ் வகுத்துரைக்கப்பட்டிருக்கும் செயலாக்க அமைப்புகள் எது?

1991ஆம் ஆண்டைய 1991அறிவிப்பாணை செயலாக்க அமைப்பு குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. அந்த அறிவிப்பாணையின் முக்கியக் குறைபாடுகளில் இதுவும் ஒன்று என்பதோடு பெரிய அளவில் நிகழ்ந்தேறிய அத்துமீறல்களுக்கு எல்லாம் இதுவே முதன்மைக் காரணமாக அமைந்தது. 2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணை அறிவிப்பாணை தொடர்பான அத்துமீறல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளின் வழிமுறைகள் மற்றும் கால அளவையை வகுத்துரைத்திருக்கிறது. இந்த அறிவிப்பாணையை சீரிய முறையில் செயல்படுத்த உதவியாய் மாநில அளவில் இயங்கிவரும் CZMAக்களும்(கடலோர மண்டல மேலாண்மை ஒழுங்குமுறை அதிகார அமைப்புகள்) மத்திய அரசின் அளவில் அமைந்துள்ள NCZMA வும் படிப்படியாக, காலவரம்புகூடிய அளவில் வலுப்படுத்தப்பட வேண்டும். 2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள்ளாக மிக சமீபத்திய உரிய வரைபடங்கள், செயற்கைக்கோள் படங்கள், தகவல்தொழில்நுட்பம் ஆகியவற்றின் உதவியோடு அத்துமீறல் இனங்காணப்பட்டு, அதன்பிறகு நான்கு மாதங்களுக்குள்ளாக, 1986ஆம் ஆண்டைய சுற்றுச்சூழல்(பாதுகாப்புச்)சட்டத்திற்கேற்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்;

### 2. உரிய செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்ய வேறு என்ன வழிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கின்றன?

CZMAக்களின் செயல்பாடுகளின் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்ய கடலோர மண்டல மேலாண்மை அதிகார அமைப்பு ஒரு இணையதளத்தை உருவாக்கிக்கொண்டு அதில் தனது நிகழ்ச்சிநிரல்கள், கூட்டநடவடிக்கைக் குறிப்புகள், எடுக்கப்பட்ட முடிவுகள், தடைநீக்க/அனுமதியளிப்பு கடிதங்கள், அத்துமீறல்கள், அவை தொடர்பாய் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், நீதிமன்ற வழக்குகள் அன்னபிற – CZMPக்கள் உட்பட – அனைத்து

விவரங்களையும் பதிவேற்றம் செய்யவேண்டும்.(இத்தகைய வழிவகைகள் 1991ஆம் ஆண்டைய CRZ அறிவிப்பாணையில் தரப்பட்டிருக்கவில்லை.

## VII. குறிப்பிட்ட கடலோரப்பகுதி நீட்சிகளுக்கான

1. **தனிச்சிறப்பான கவனிப்பு தேவைப்படும் பகுதிகள் யாவை?**

1991ஆம் ஆண்டைய அறிவிப்பாணை நாடு முழுவதிலுமான கடலோரப்பகுதிகளுக்கென பொதுவான ஒழுங்குமுறைப்படுத்தலை முன்வைத்தது. அதில் சுற்றுச்சூழல் சார் பல்வகைமை, சமூக-பொருளாதாரச் சூழல்கள், வளர்ச்சி-மேம்பாட்டிற்கான அழுத்தங்கள்/நெருக்கடிகள் அன்னபிற கனக்கிலெடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆனால் 2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணையில் உள்ளூர் மக்கட்சமூகங்கள் எதிர்கொண்டுவரும் பலவகையான பிரச்னைகளை – குடிசைப்பகுதிகளில் வசித்துவரும் தனிநபர்கள், மும்பயிலுள்ள பழைய மற்றும் பாதுகாப்பற்ற கட்டிடங்களில் வசித்துவருபவர்கள், கேரள மாநிலத்திலுள்ள காயல்களில் அமைந்துள்ள தீவுப்பகுதிகளில் வசித்துவரும் மக்கள், கோவா மாநிலத்தின் கடலோரப்பகுதியில் வசித்துவரும் உள்ளூர் மக்கட்சமூகங்கள், மற்றும் சுந்தர்வனத்தின் வாழ்க்கைச்சூழல் ரீதியாக பாதிப்புக்காளாகக்கூடிய நுண்மைத்தன்மை வாய்ந்த பகுதிகளில் வசித்துவரும் மக்கட்சமூகங்கள் அன்னபிறர் – கவனத்தில் எடுத்துக்கொண்ட அளவில் தனிச்சிறப்பான வழிவகைகள்/ விதிமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

2. **அகண்ட மும்பய்க்காகத் தரப்ப்பட்டுள்ள தனிச்சிறப்பான வழிவகைகள்/விதிமுறைகள் யாவை?**

மும்பய் சில தனிப்பட்ட வகையான சுற்றுச்சூழல் மற்றும் சமூகம் சார்ந்த பிரச்னைகளை எதிர்கொண்டுவருகிறது என்பதை கவனத்தில் எடுத்துக்கொண்ட அளவில் பிவரும் வழிவகைகள்/விதிமுறைகள் வகுத்துரைக்கப்பட்டுள்ளது:

A. **CRZ-I பகுதிகள் (கடலோர ஒழுங்குமுறை மண்டலம்)**:

- அனுமதியளிக்கப்பட்ட சாலைகள் மற்றும் இணைப்பு வழிகள் அனைத்தும் ஓத நீர் பாய்ச்சல் மற்றும் அலைகளின் நீர் தடையின்றிப் பாய்ந்தோடுவதற்கு ஏதுவாக, தூண்களின் மீதே அமைக்கப்பட வேண்டும்.
- மேற்படி கட்டுமானப்பணியின்போது அழிக்கப்பட்ட அலையாத்தி மரங்களைப் போல் ஐந்து மடங்கு எண்ணிக்கையில் மீண்டும் நட்டுவைக்கப்பட வேண்டும்.
- இந்த அறிவிப்பாணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடத்திற் குள்ளாக அலையாத்திமரப்பகுதிகள் அனைத்தும் வரைபடத்தில் குறித்துக் காட்டப்படவேண்டும்; அவற்றைப் பேணிப் பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்; திடக்கழிவுகள் CRZ பகுதிக்கு அப்பால் இடம்பொருத்தப்பட வேண்டும்; இடர்கோட்டின் கடல்நோக்கிய பக்கத்தில் அமைந்துள்ள வசிப்பிடங்கள், கட்டிடங்களைப் பாதுகாக்க செயல்திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

B. **CRZ-II பகுதி:**

1. மாநில அரசு CRZ-II பகுதிகளில், சம்பந்தப்பட்ட செயல்திட்டத்திற்கு அனுமதியளிக்கப்பட்ட நாளில் புழக்கத்திலிருந்துவரும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற வளர்ச்சித்திட்ட விதிமுறைகளின் கீழ் வகுத்துரைக்கப்பட்டுள்ள தரைப்பரப்பு அட்டவணை அல்லது தரைப்

பரப்பு விகிதாச்சாரம் ஆகியவற்றிற்கேற்ப குடிசைப்பகுதி மறுவளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளலாம். என்றபோதும், இத்தகைய செயல்திட்டங்களில் மாநில அரசின் அல்லது அதன் செயல் இயந்திரங்களின் பங்கு 51%ற்குக் குறைவாக இருக்கலாகாது.

2. CRZ-II பகுதியில் அமைந்துள்ள பழைய, சிதிலமடைந்த, பாதுகாப்பற்ற கட்டிடங்களில் மறுசீரமைப்புப் பணிகளோ, புனர்நிர்மாணப் பணிகளோ மேற்கொள்ளப்படலாகாது. இத்தகைய செயல்திட்டங்கள் அனைத்தும் அந்தந்தக் கட்டிடங்களின் உரிமையாளர்களால் நேரிடையாகவோ அல்லது தனியார் வீட்டுவசதி நிறுவனர்களாலோ மேற்கொள்ளப்படவேண்டும். இத்தகைய கட்டுமானப் பணிகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட செயல்திட்டம் உரிய அதிகார அமைப்பால் அனுமதியளிக்கப்பட்ட நாளில் நடப்பிலிருந்துவரும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஒழுங்குவிதிகளுக்கேற்ப அமையவேண்டியது இன்றியமையாததாகும்.

3. அகண்ட மும்பய் பகுதியின் ‘பசும் நுரையீரலை’ப் பாதுகாக்கும் பொருட்டும், பேணிப்பராமரிக்கும் பொருட்டும் CRZ-IIற்குட்பட்ட அளவில் வளர்ச்சித்திட்டங்களாகக் குறிக்கப்பட்டுள்ள திரந்த வெளிகள், பூங்காக்கள், தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் அனைத்தும் CRZ-III என்று, அதாவது ’வளர்ச்சிப்பணி மேற்கொள்ளப்பட லாகா மண்டலமாக(‘no development zone) வகுத்துரைக்கப்பட வேண்டும். சுத்தம்-சுகாதாரம் சம்பந்தப்பட்ட கட்டுமானங்கள் மற்றும் பொழுதுபோக்கு விளையாட்டுகளுக்கான வசதிகள், தரையளவு அலகு 15% வரை இருப்பின் அனுமதிக்கப்படலாம். அத்தகைய வெளிகளின் வசிப்பிட மற்றும் வர்த்தகம் சார் பயன்பாட்டிற்கு அனுமதியில்லை.

4. CRZ-II பகுதிகளில் உள்ள உள்ளூர் சமூகங்களுக்குச் சொந்தமான வசிப்பிடங்களில் மறுசீரமைப்புப் பணிகள் மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் உரிய அதிகாரிகளால் முன்னுரிமை அடிப்படையில் அனுமதிக்கப்படலாகும்.

5. கோலிவாடா உட்பட உள்ள மீன்பிடிக் குடியிருப்புகள் மற்றும் 1981ஆம் ஆண்டைய வளர்ச்சித் திட்டம் அல்லது மகராஷ்டிர மாநில அரசின் உரிய ஆவணங்களில் அடையாளங்காட்டப்பட்டிருக்கும் பகுதிகள் ஆகியவை உரிய அளவாக வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டு, இந்தக் குடியிருப்புகளில் கட்டுமானப் பணிகள் மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் என்று எந்தவிதமான வளர்ச்சிப்பணிகளும் ஏற்புடைய நகர்ப்புற மற்றும் கிராமப்புற வளர்ச்சித்திட்ட ஒழுங்குவிதிகளுக்குப் பொருந்துமளவில் மேற்கொள்ளப்படும் விதத்தில் அவை CRZ-III என்று அறிவிக்கப்பட வேண்டும்.

### 3. அகண்ட மும்பைக்குத் தரப்பட்டுள்ள இத்தகைய தனிச்சிறப்பான விதிமுறைகள் காரணமாய் எத்தகையதொரு தவறும் நடைபெற்றுவிடாது என்பதை உறுதிப்படுத்த என்ன செயல் இயந்திரம் அல்லது செயல்நுட்பம் வகுத்துரைக்கப்பட்டுள்ளது?

மும்பயிலுள்ள குடிசைப்பகுதிகள் மற்றும் சிதிலமடைந்த கட்டிடங்களில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புப் பணிகள் மிகவும் வெளிப்படையாகவும், பொறுப்பேற்புடைய அளவிலும் நடைபெறுவதை உறுதிசெய்யும் பொருட்டு கீழ்க்கண்ட வழிவகைகள் தரப்பட்டுள்ளன:

6. உரிய அதிகாரிகளால்/அதிகார அமைப்புகளால் தடையில்லா அனுமதியளிக்கப்பட்ட மறுசீரமைப்பு மற்றும் புனர்நிர்மாணச் செயல்திட்டங்கள் அனைத்திற்கும் 2005ஆம் ஆண்டைய தகவலறியும் உரிமைச் சட்டம் ஏற்புடையதாக வகுத்துரைக்கப்பட்டுள்ளது.

7. குடிசைப்பகுதி மீள்-வளர்ச்சித் திட்டங்களைப் பொறுத்தவரை கணக்குத் தணிக்கை இந்திய அரசின் தலைமைத் தணிக்கை அதிகாரியால் (C&AG) மேற்கொள்ளப்பட வேண்டும்; சிதிலமடைந்த, வரி செலுத்தப்பட்ட (cessed) மற்றும் பாதுகாப்பற்ற கட்டிடங்களைப்

பொறுத்தவரை C&AG யின் அதிகாரபூர்வ கணக்குத்தணிக்கையாளரால் மேற்கொள்ளப்படவேண்டும்( empanelled statutory auditor of C&AG)

8. தொடர்ந்த இடைவெளிகளில் இந்தத் திட்டங்களை மதிப்பாய்வு செய்வதற்காகவும், பரிசீலித்துவருவதற்காகவும் ஒரு உயர் மட்ட மேற்பார்வைக் குழுவை மகராஷ்டிர மாநில அரசு நியமிக்கவேண்டும். இந்தக் குழுவில் உள்ளூர் நகர்ப்புற அரசுத்துறைகள், மாநில அரசு மற்றும் மத்திய அரசின் பிரதிநிதிகளும், மேலும் கட்டிடக்கலை வல்லுநர்கள், நக்ர்ப்புற வளர்ச்சித்திட்டவியலாளர்கள், பொறியாளர்கள், குடிமைச்சமூக உறுப்பினர்களும் இடம்பெறவேண்டும்.

**4. கேரளாவுக்குத் தரப்பட்டுள்ள தனிச்சிறப்புவாய்ந்த வழிவகைகள்/ விதிமுறைகள் யாவை?**

கேரள மாநிலம் மிகத் தனித்துவம் வாய்ந்த கடலோரச் சுற்றுச்சூழல்களில் ஒன்றைப் பெற்றிருக்கிறது. இதில் 300க்கும் மேற்பட்ட தீவுகள் அதன் காயல்களுக்குள் இடம்பெற்றிருக்கின்றன. கேரளாவின் இத்தகைய தனித்துவமான புவியியல் அமைப்பைக் கணக்கில்கொண்ட அளவில் மேற்படி அறிவிப்பாணையில் கேரளாவின் கடலோரப் பகுதிகளுக்கென தனிச்சிறப்பான வழிவகைகள்/விதிமுறைகள் வகுத்துரைக்கப்பட்டுள்ளன.

கேரளாவின் காயல்களிலுள்ள தீவுகள் குறுகிய பரப்பளவிலான நிலத்திட்டுகளாக விளங்குவதால் பரப்பு நிலம் நோக்கிய பக்கத்திலான உயர் அலைக்கோட்டிலிருந்து (HTL) 50 மீட்டர்கள் என்பதாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதி ‘வளர்ச்சிப்பணி மேற்கொள்ளப்படலாகா மண்டலமாகும். இங்கு எந்தவொரு புதிய கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்படலாகாது. என்றபோதும், இந்தப் பகுதியில் ஏற்கனவே இருந்துவரும் வசிப்பிடங்கள்/குடியிருப்புகள் ஆகியவை பழுதுபார்க்கப்படலாம்; மறுசீரமைக்கப்படலாம். கடற்கரை சார் தேவையான வசதிகள், மீன்பிடித்துறை, மீன் உலர்த்தும் திடல்கள், வலை பின்னும் திடல்கள், மரபான வழிகளில் மீன் பதனிடுதல், ஐஸ்கட்டி தயாரிக்கும் தொழிற்சாலை, படகு பழுதுபார்த்தல் அன்னபிறவும் 0-50 மீட்டர்களுக்குட்பட்ட பரப்பில் கட்டியெழுப்பப்படலாம். நிலம் நோக்கிய பக்கத்திலமைந்த உயர் அலைக்கோட்டிலிருந்து 50 மீட்டர்களுக்கு அப்பால், உள்ளூர் மக்கட்சமூகங்களின் வசிப்பிடங்கள்/ குடியிருப்புகள் உள்ளூர் ஊராட்சியமைப்பின்(பஞ்சாயத்து) அனுமதியோடு கட்டிக்கொள்ளப்படலாம்.

**5. சுந்தர்வனம் மற்றும் அதையொத்த வாழ்க்கைச்சூழல் சார் நுண்மைத்தன்மை கொண்ட பிறவேறு பகுதிகளுக்கென்று தரப்பட்டுள்ள தனிச்சிறப்புவாய்ந்த வழிவகைகள்/விதிமுறைகள் யாவை?**

இந்தியாவிலுள்ள மிகப்பெரிய அலையாத்திக்காடுகளைக்கொண்ட பரப்பு சுந்தர்வனமாகும். இதன் உயிர்மவெளிப்பரப்பிற்குட்பட்ட பகுதியிலேயே ஏறத்தாழ 5 லட்சம் மக்கள் வசித்துவருகிறார்கள். காலநிலை மாற்றம் காரணமாக கடல்மட்டம் உயர்ந்து வருதல், தட்பவெப்பநிலை/பருவநிலையின் போக்கில்/பாணியில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றின் விளைவாக சுந்தர்வனம் பெருமளவு பாதிப்படைந்துவருகிறது. மேலும், உள்ளூர் மக்கட்சமூகங்கள் போதுமான உள்கட்டமைப்புவசதிகள் இல்லாமல் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகிவருகிறார்கள். கடும் சிரமங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த அறிவிப்பாணையின் கீழ் சுந்தர்வனம் பகுதிக்கும், அதையொத்த அளவு வாழ்க்கைச்சூழல் ரீதியாக நுண்மைத்தனமையும், முக்கியத்துவமும் கொண்டு விளங்கும், குஜராத்திலுள்ள கம்பட் வளைகுடா, கட்ச் வளைகுடா, மகராஷ்டிர மாநிலத்திலுள்ள மல்யன், அச்ரா-ரத்னகிரி கர்நாடகாவிலுள்ள கார்வார் மற்றும் குந்தாபூர் பகுதிகள், கேரளாவிலுள்ள வேம்பநாடு, ஒரிஸ்ஸாவிலுள்ள பைதர்கனிகா, ஆந்திராவிலுள்ள கோரிங்கா, கிழக்கு கோதாவரி மற்றும் கிருஷ்ணா போன்ற பிறவேறு பகுதிகளுக்கும் ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டம் (integrated

management plan) ஒன்று தயாரிக்கப்படவுள்ளது. இந்தப் பகுதிகள் அபாயகரமான அளவு பாதிக்கப்படலாகும் பகுதிகளாக [Critical Vulnerable Coastal Areas (CVCA)] அறிவிக்கப்பட்டு இந்தப் பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் மேற்குறிப்பிட்ட 'ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டம்' தனித்தனியே அவ்வப்பகுதியைச் சேர்ந்த மக்கட்சமூகங்களோடு கலந்தாலோசித்து அதன் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

இந்த 'ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுச் செயல்பட ஆரம்பிக்கும் வரை இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கட்சமூகங்களுக்குத் தேவையான உள்கட்டமைப்பு சார் வளர்ச்சி-மேம்பாட்டு வசதிகள் அனைத்தும் கடலோர மண்டல மேலாண்மை அதிகாரியால்/அதிகார அமைப்பால் தனித்தனியான அளவில் பரிசீலிக்கப்பட்டு அனுமதிக்கப்படலாகும்.

**6. கோவா மாநிலத்திற்குத் தரப்பட்டுள்ள தனிச்சிறப்புவாய்ந்த விதிமுறைகள் யாவை?**

கோவா மாநிலத்திற்கென தனிச்சிறப்புவாய்ந்த வழிவகைகள்/விதிமுறைகள் மேற்படி அறிவிப்பாணையில் இடம்பெற்றுள்ளன. இங்குள்ள கடலோரப் பகுதிகளில் நிலையான வளர்ச்சி-மேம்பாடுகள் சாத்தியமாகவும், வாழ்க்கைச்சூழல் பாதுகாக்கப்படவும் உதவியாய் இறுக்கமான ஒழுங்குமுறைக் கண்காணிப்புச் செயல் இயந்திரம் இயங்கிவருவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. பிறவேறு வழிவகைகளும்/ விதிமுறைகளும் பின்வருமாறு:

9. கடலோரமாய் வசித்துவரும் மக்களின் மரபுவழியான தொழில் மீன்பிடித்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய செயல்பாடுகள் என்பதாலும், மீன்பிடித் தொழிலில் வழிவழியாக ஈடுபட்டுவரும் மக்கட்சமூகங்களுடைய வாழ்வாதாரங்களுக்கு அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படுகின்றன என்பதாலும் அத்தகைய வசதிகள், ஒரு முழுநிறைவான சுற்றாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் கோவா மாநில அரசால் செய்துதரப்படும்.

10. CRZ பகுதிகளில் உள்ளூரைச் சேர்ந்த மக்கட்சமூகங்களின் வசிப்பிடங்கள்/ குடியிருப்புப்பகுதிகளில் மீள்-கட்டுமானப் பணிகளும், பழுதுபார்ப்புப் பணிகளும் அனுமதிக்கப்படலாகும்.

11. கஸான் நிலங்கள் என்று வழங்கப்படுகின்ற, அலையழுத்தத் தாக்கம் கொண்ட, வாழ்க்கைச்சூழல் சார் நுண்மைத்தன்மை கொண்ட தாழ்நிலப்பகுதிகள் வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட வேண்டும். கஸான் நிலங்களில் எந்தவிதமான வளர்ச்சிப்பணிகளும் அனுமதிக்கப்பட மாட்டாது.

12. மணற்குன்றுகள், விரிகுடாக்கள் மற்றும் கடலோரமாக அமைந்துள்ள சிறுநீர்ப்பரப்புகள், விரிகுடாக்கள், சிறு வளைகுடாக்களில் அமைந்துள்ள கடற்கரை நீட்சிகள் ஆகியவை குறித்து உரிய சுற்றாய்வு மேற்கொள்ளப்பட்டு வரைபடத்தில் குறித்துக்காட்டப்படவேண்டும். இத்தகைய மணற்பாங்கான பகுதிகளில் எந்தவிதமான செயல்பாடுகளும் அனுமதிக்கப்பட மாட்டாது.

13. மாண்ட்ரெம், மோர்ஜிம், கல்ஜிபா மற்றும் அகோண்டா (Mandrem, Morjim, Galgiba and Agonda) போன்ற கடற்கரைகள் ஆமை அடகாத்து இனவிருத்தி செய்யும் பகுதிகளாக இனங்கானப்பட்டு 1972ஆம் ஆண்டைய வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.இந்தப் பகுதிகளில் உரிய சுற்றாய்வு மேற்கொள்ளப்பட்டு இவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு மேலாண்மைத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். இந்தப் பகுதிகளில் எந்தவிதமான வளர்ச்சிப்பணிகளும் மேற்கொள்ளப்படலாகாது.

## VIII. 1991ஆம் ஆண்டைய அறிவிப்பாணையின் கீழ் நிலுவையிலுள்ள வழக்குகள் மற்றும் அத்துமீறல்கள் தொடர்பான அதிகாரப்பொறுப்பு இடமாற்றம்: தனிச்சிறப்பான விதிமுறைகள்:

**1. 2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணை செயலாக்கம் பெறுகிறது என்பதால் CRZ அறிவிப்பாணையின் கீழ் நடப்பிலிருந்துவரும் அத்துமீறல்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன என்று அர்த்தமா?**

இல்லை. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தால் (MoEF), 1986ஆம் ஆண்டைய சுற்றுச்சூழல்(பாதுகாப்புச்)சட்டத்தின் பிரிவு 5இன் கீழ் வெளியிடப்பட்டுள்ள உரிய அளவான வழிகாட்டுதலின்படி, அனைத்து கடலோர மண்டல மேலாண்மை அதிகார அமைப்புகளுக்கும்(CZMAs) உரிய மிக சமீபத்திய வரைபடங்கள், செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் தக வல்-தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கையாளவேண்டிய வழிமுறைகள் குறித்து குறிப்பான வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்படும்.

**2. 2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணை வெளியிடப்பட்டவுடன் 1991 ஆம் ஆண்டைய அறிவிப்பாணையின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள கடலோர மண்டல மேலாண்மைத் திட்டங்களின் நிலைமை என்னவாகும்?**

2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணைக்கேற்ப தயாரிக்கப்படும் புதிய கடலோர மண்டல மேலாண்மைத் திட்டங்கள்(CZMPs) ஏற்றுக்கொள்ளப்பட்டு உரிய ஒப்புதலைப் பெறும் வரை 1991 ஆம் ஆண்டைய அறிவிப்பாணைக்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ள கடலோர மண்டல மேலாண்மைத் திட்டங்கள் (CZMPs) பின்பற்றப்பட்டுவர மேற்படி புதிய அறிவிப்பாணையில் வழிவகுக்கப்பட்டுள்ளது.

**3. 2011ஆம் ஆண்டைய கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணை, 1991 ஆம் ஆண்டைய அறிவிப்பாணையின்படி சட்டத்திற்குப் புறம்பாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை – ஆதர்ஷ் குடியிருப்புகள், அன்னபிற – ஒழுங்கமைக்குமா?**

இல்லை. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தால் (MoEF), 1986ஆம் ஆண்டைய சுற்றுச்சூழல்(பாதுகாப்புச்)சட்டத்தின் பிரிவு 5இன் கீழ் வெளியிடப்படவுள்ள உரிய வழிகாட்டுதலின்படி அனைத்து கடலோர மண்டல மேலாண்மை அதிகார அமைப்புகளுக்கும்(CZMAs) உரிய மிக சமீபத்திய வரைபடங்கள், செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் தக வல்-தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கையாளவேண்டிய வழிமுறைகள் குறித்து குறிப்பான வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்படும்.

## IX. தீவுப் பாதுகாப்பு மண்டல அறிவிப்பாணை

**1. 2011 ஆம் ஆண்டைய தீவுப் பாதுகாப்பு மண்டல அறிவிப்பாணை என்ற ஒரு தனி அறிவிப்பாணை வெளியிடப்படவேண்டிய அவசியமென்ன?**

அந்தமான் & நிகோபார் பகுதியில் ச்மர்ர் 500 தீவுகள் இருக்கின்றன. லட்சத்தீவுப் பகுதியில் ஏறத்தாழ 30 தீவுகள் இருக்கின்றன. இந்த இரண்டு கடல்சார் திவுகளும் நாட்டின் உச்சபட்ச வளமான, செழிப்புமிக்க உயிர்மப் பல்வகைமைப் பகுதிகளில் சிலவாகப் முக்கியத்துவம் பெற்று

விளங்குகின்றன. A&N Islands என்று பரவலாகக் குறிப்பிடப்படும் அந்தமான்&நிகோபார் தீவுப்பகுதிகள், வனப்பரப்பு உள்ளிட்ட அளவிலான அவற்றின் உயிர்மப் பல்வகைமைக்குப் பெயர்பெற்றவை, அந்தமான்&நிகோபார் புவிப்பரப்பில் 85 சதவிகிதப் பரப்பை தம்முள் அடக்கியிருக்கின்றன. லட்சத்தீவோ ஒரு பவளத்தீவாக விளங்குகிறது. இந்தத் தீவுகளின் புவிப்பரப்பு மிகவும் குறைவானது என்பதால் இவற்றின் பெருவாரியானவற்றில் 500 மீட்டர்கள் கடலோர ஒழுங்குமுறை மண்டல ஒழுங்குவிதிகள் ஒன்றின் மீது மற்றொன்று மேற்கவிந்திருக்கும் விதத்தில் அமைந்துள்ளன. எனவே, ஒரு தனி அறிவிப்பாணை, தீவு முழுமைக்குமான மேலாண்மையை கவனத்தில் எடுத்துக்கொள்ளும்விதமாக(A&N இன் வடக்கு அந்தமான், மத்திய அந்தமான், தெற்கு அந்தமான் மற்றும் நிகோபாரின் பெருநிலப்பரப்பு ஆகிய நான்கு தீவுகளைத் தவிர்த்த அளவில்) ஒரு தனி அறிவிப்பாணை வெளியிடப்பட்டுள்ளது.

**2. 2011 ஆம் ஆண்டைய தீவுப்பாதுகாப்பு மண்டல அறிவிப்பாணை(IPZ Notifi cation, 2011) முக்கியக் குறிக்கோள்கள் யாவை?**

2011 ஆம் ஆண்டைய தீவுப்பாதுகாப்பு மண்டல அறிவிப்பாணை(IPZ Notification, 2011) யின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு:

- கடலோரப் பகுதிகளில் வாழ்ந்துவரும் மீனவ சமூகத்தினர், பழங்குடியினத்தவர்கள் மற்றும் பிறவேறு உள்ளூர் மக்கட்சமூகத்தினரின் வாழ்வாதாரப் பாதுகாப்பிற்கு உத்திரவாதமளித்தல்;
- கடலோரப் பகுதிகளையும் அவற்றின் நீட்சிகளையும் பேணிப் பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல்; மற்றும்
- கடலோரப் பகுதிகளில் நிலவும் இயற்கைச் சீற்றங்கள்/பேரிடர்கல் தொடர்பான அபாயநிலைமைகளையும், புவி வெப்பமாதல் காரணமாய் கடல்மட்டம் உயர்வடைவதையும் கவனத்தில் எடுத்துக்கொண்ட அளவில் அறிவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் நிலப்புத்தன்மை வாய்ந்த வளர்ச்சியை மேம்படுத்துதல்;

**3. 2011 ஆம் ஆண்டைய தீவுப்பாதுகாப்பு மண்டல அறிவிப்பாணை(IPZ Notifi cation, 2011) யின் செயலாட்சிப் பரப்பெல்லை யாது?**

வடக்கு அந்தமான், மத்திய அந்தமான், தெற்கு அந்தமான் மற்றும் நிகோபாரின் பெருநிலப்பிரிவு ஆகிய நான்கு தீவுகளைப் பொறுத்த வரையிலும் மேற்படி அறிவிப்பாணை நிலம்நோக்கிய பக்கம் அமைந்துள்ள உயர் அலைக் கோட்டிலிருந்து 500 மீட்டர்களுக்கு உட்பட்ட பகுதிகளில் செல்லுபடியாக்கம் பெற்றதாகிறது. அந்தமான்&நிகோபார் மற்றும் லட்சத்தீவிலுள்ள மற்ற எல்லாத் தீவுகளையும் பொறுத்த அளவில் அவற்றின் மொத்த புவிப்பரப்பும் – 12 கடல்மைல்கள் வரையான நீர்ப்பரப்பு உட்பட – இந்த அறிவிப்பாணையின் அதிகார எல்லையின் கீழ் வருகின்றன.

**4. இந்தத் தீவுகளின் மேலாண்மையைப் பொறுத்த அளவில் அவற்றில் இயற்கைப் பேரிடர்கள் எத்தனை குறுகிய கால இடைவெளிகளில் நிகழ்ந்தேறுகின்றன என்பது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறதா?**

ஆம், அந்தமான் - நிகோபார் தீவுகளில் நிலநடுக்கம், ஆழிப்பேரலைகள், புயல் போன்ற இயற்கைப் பேரிடர்கள் அடிக்கடி ஏற்படக்கூடிய அபாயச்சூழல் நிலவுகிறது. ஒருங்கிணைந்த தீவுகள் மேலாண்மைத் திட்டம்(IIMPs) அத்தகைய இயற்கைப் பேரிடர்கள் அனைத்தையும் மற்றும் சுற்றுச்சூழல் சார் பிரவேறு பிரச்னைகளையும் கணக்கிலெடுத்துக்கொள்ளும்.

ஒருங்கிணைந்த தீவுகள் மேலாண்மைத் திட்டங்கள்(IIMPs) தயாரிப்பதற்குரிய பொருத்தமான வழிகாட்டி நெறிமுறைகள் இந்த அறிவிப்பாணையில் வகுத்துரைக்கப்பட்டுள்ளன.

## X. தொகுப்புரை: 2011ஆம் ஆண்டைய கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணை மற்றும் 1991ஆம் ஆண்டைய கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணை - ஒப்பாய்வு

**1. 2011ஆம் ஆண்டைய கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணையில் இடம்பெறும் குறிப்பிடத்தக்க, முக்கியமான புதிய விதிமுறைகள் யாவை?**

(i) 12 கடல் மைல்கள் தொலைவு வரையான நீர்ப்பரப்பு உள்ளிட்ட அளவிலான மொத்த நீர்ப்பரப்பும், மற்றும் ஆறு, சிற்றோடை, ஆற்றின் முகப்பு போன்ற அலைஅய்ழுத்தத் தாக்கம் கொண்ட நீர்நிலைகளின் மொத்த நீர்ப்பரப்பும் இந்த அறிவிப்பாணையால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும்;

(ii) கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள உள்கட்டமைப்பு வசதிகள் உட்பட, உள்ளூர் மக்கட்சமூகங்களின் வாழ்வாதாரம் மற்றும் சொத்துடைமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு பேரிடர்க்கோடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியச் சுற்றாய்வு அமைப்பின் அலுவலகங்கள் மூலமாக இந்தப் பேரிடர்க்கோடு வரையறுக்கப் படும்;

(iii) சுற்றுச்சூழல் சார் மற்றும் சமூகம் சார் பிரச்னைகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட அளவில், அகண்ட மும்பய், கேரளா, கோவா, மற்றும் சுந்தர்வனம் போன்ற மிக அதிக அளவு பாதிப்படையலாகும் நுண்மைத்தன்மை வாய்ந்த கடலோரப் பகுதிகள் ஆகியவற்றிற்குத் தனிச்சிறப்பான வழிவகைகள்/ விதிமுறைகள் இந்த அறிவிப்பாணையில் தரப்பட்டுள்ளன;

(iv) மனிதனால் விளையும் இடையீடுகளின் காரணமாக கடலோரப் பகுதிகளில் ஏற்படுகின்ற நில அரிப்பைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட அளவில் கடற்கரைப் பகுதியின் விளிம்பெல்லைக்கோடு, செயற்கைக் கோள் வழியாகப் பெறப்பட்ட சமீபத்திய புகைப்படங்களின் உதவியோடு வரைபடத்தில் குறித்துக்காட்டப்படும். அதைத் தொடர்ந்து கடற்கரை விளிம்புக்கோடுகள் உயர் அளவு நில அரிப்புப் பகுதிகள், குறைந்த அளவு அரிப்புக்காளாகின்றவை அல்லது நிலையாக இருந்துவரும் பகுதிகள் என்று பகுக்கப்படும் உயர் அளவு நில அரிப்புப் பகுதிகளில் கடற்கரை சார் எந்தவிதமான வளர்ச்சிப்பணியும் மேற்கொள்ளப்பட லாகாது.

(v) மீனவ சமூகங்கள் மற்றும் வழிவழியாகக் கடலோரப் பகுதிகளில் வாழ்ந்துவருகின்ற மக்கட்சமூகங்களின் அதிகரித்துக்கொண்டேவரும் வசிப்பிட/குடியிருப்புத் தேவையை நிறைவேற்றும் பொருட்டு உயர் அலைக்கோட்டிலிருந்து 200 மீட்டர்கள் தொலைவுவரையான ‘வளர்ச்சிப்பணி மேற்கொள்ளப்படலாகா மண்டலம் 100 மீட்டர்கள் என்பதாகக் குறைக்கப்படுகிறது.

2. 1991 **ஆம் ஆண்டைய அறிவிப்பாணையில் இடம்பெற்றுள்ள முக்கிய ஷரத்துகள்/விதிமுறைகளில் எவை** 2011 **ஆம் ஆண்டைய அறிவிப்பாணையில் தக்கவைத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன**.?

(i) கடல்முகப்பின்கண் அமைந்துள்ள உயர் அலைக்கோட்டிலிருந்து 500 மீட்டர்கள் வரையிலும் மற்றும் அலையழுத்தத் தாக்கம் கொண்ட நீர்நிலைகளின் போக்கில் 100 மீட்டர்கள் தொலைவு வரையும் அதிகாரப்பரப்பெல்லையாக 1991ஆம் ஆண்டைய அறிவிப்பாணையில் வகுத்துரைக்கப்பட்டிருந்தது 2011 ஆம் ஆண்டைய அறிவிப்பாணையில் தக்கவைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

(ii) கடலோர ஒழுங்குமுறை மண்டலப் பகுதியை கடலோர ஒழுங்குமுறை மண்டலப் பகுதி– [(Coastal Regulation Zone-I) வாழ்க்கைச்சூழல் ரீதியாய் நுண்மைத்தன்மை வாய்ந்த பகுதிகள்)], கடலோர ஒழுங்குமுறை மண்டலப் பகுதி– 11 [(Coastal Regulation Zone-I1 நகர்ப்புறப் பகுதிகள்)] கடலோர ஒழுங்குமுறை மண்டலப் பகுதி– 111[Coastal Regulation Zone-III (கிராமப்புறப் பகுதிகள்)] என்பதாக 1991ஆம் ஆண்டைய அறிவிப்பாணையில் பகுக்கப்பட்டிருந்தது 2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணையில் தக்கவைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

(iii) கடலோர ஒழுங்குமுறை மண்டலம் – 1, 11 மற்றும் 111 (Coastal Regulation Zone-I, II and III) என்று வரையறுத்துக் காட்டுதல் என்பதாய் கடலோர மண்டல மேலாண்மைத் திட்டங்கள் தயாரிப்பதில் பின்பற்றப்பட்ட செயல்வழிமுறையும் தக்கவைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

3. **1991ஆம் ஆண்டைய அறிவிப்பாணையில் இடம்பெற்றிருப்பவற்றில் 2011ஆம் ஆண்டைய அறிவிப்பாணையில் தக்கவைத்துக்கொள்ளப்படாமல் நீக்கப்பட்டுவிட்ட முக்கிய விதிமுறைகள் யாவை?**

(i) கடலோர ஒழுங்குமுறை மண்டலப் பகுதியில் இனி வேறு எந்தவொரு SEZ செயல்திட்டங்களும் அனுமதிக்கப்பட மாட்டாது.

(ii) அந்தமான் & நிகோபார் மற்றும் லட்சத்தீவு தொடர்பான ஒழுங்குமுறை விதிகள் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக, குறிப்பான புவியியல் சார் பிரச்னைகள், சுற்றுச்சூழல் சார் நுண்மைத்தன்மைளைக் கணக்கிலெடுத்துக்கொண்ட அளவிலும், தீவுவாழ் மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டியும் IPZ Notification ( தீவுப்பாதுகாப்பு மண்டல அறிவிப்பாணை) என்று வழங்கப்படுகின்ற ஒரு தனி அறிவிப்பாணை வெளியிடப்பட்டிருக்கிறது.

(iii) கடலோர ஒழுங்குமுறை மண்டலம்-111 இன் கீழ் இடம்பெறும் பகுதியில் கிராமப்புற மக்களுக்கான வசிப்பிட/குடியிருப்பு சார் விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஷரத்துகள் நீக்கப்பட்டுவிட்டன.